மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre
பேச்சுப் போட்டி 2022
Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

# ஆண்டு 9

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம்!

## தமிழ் அறிஞர் மறைமலை அடிகள்

உயிர் எழுத்துகள் ஈராறு, மெய் எழுத்துகள் மூவாறு, இவற்றின் இணைப்பில் உருவான மொழி தமிழ்மொழி. இறைவனை மயக்கும் மொழி. தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தமொழி. வள்ளுவன் திருக்குறள் படைத்த மொழி. சிறந்த இலக்கியங்கள் அமைந்தமொழி. நீதி நெறிகள் எடுத்துக்கூறி மானிடம் தழைக்க வழிகாட்டும் மொழி.



தமிழ்மொழி தனித்து இயங்கும் தன்மைமிக்கது. பிறமொழிக் கலப்பின் தேவை அற்றது. தரணியெங்கும் பரந்து எழுந்து புகழ்பூத்து உலகாளும் எனும் கருத்தை மனம்கொண்டு, உறுதியுடன், துணிவாக தமிழ்மொழிக்காய் உழைத்து வாழ்ந்த பெருமகனார் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள். பிறமொழிக் கலப்பு தமிழ்மொழியை உண்பதை அறிவால் உணர்ந்தார். தனித்தமிழை ஊக்குவித்தார். தனித்தமிழ் இயக்கமும் தொடக்கினார்.

தமிழ் மொழியுடன் வடமொழி எழுத்துகள், வடமொழிச் சொற்கள் என்பவற்றை கலந்து எழுதுதல் மணிப்பிரவாள நடை எனப்படும். இது தமிழின் ஆற்றலை குன்றச்செய்தது. பிறமொழிக்கலப்பை ஊக்குவித்தது. மணிப்பிரவாள நடைக்கு இணையான சொற்களை தமிழில் புகுத்தினார். தனித்தமிழ் எங்களிடையே நிலைக்க வேண்டும் என விளக்கிக்கூறினார்.

மண், நாடு, விடுதலை, என்று போராடிய ஈழத்துப் போராளிகளும் எங்கள் மொழிக்காக, தூய தமிழுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டனர். தூய தமிழை பாவிக்க வைத்தனர். உயிரிலும் உயர்வாய் தனித் தமிழைப் போற்றினர். எனவே தமிழை செழுமைப்படுத்த அடித்தளம் இட்ட பெரியார் அறிஞர் மறைமலையடிகள் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி,
வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. செல்வராஜி இரங்கநாதன்.